O.S. 138 /18 நாள் 21.10.2019

பி.வா.சா.2 கண்ணன்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் எல்லை பாதுகாப்புப் படையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கதவு எண்.59/1 பெரியார் நகர் வீடு என் மனைவிக்குப் பாத்தியப்பட்டது. பிராது தபசில் வீட்டிற்கு எதிர்த்தாற்போல் என்னுடைய மனைவியின் வீடு உள்ளது. என்னுடைய மனைவியின் வீட்டிற்கும், பக்கத்தில் உள்ள என் சகலபாடி வீட்டிற்கும் 10 வருடங்களுக்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பிரச்சனையில் வாதி, பிரதிவாதியின் தந்தையான வேலாயுதம் இரு வீட்டினருக்குமிடையே பேசி சமாதானம் ஏற்பட்டது என்றால் சரிதான். வேலாயுதம் இந்த பிரச்சனையில் என்னுடைய சகலபாடி வசம்தான் நியாயம் உள்ளது என்று சொன்னார் என்றால் சரியல்ல. அந்த பிரச்சனையில் வேலாயுதம் அவருக்கு சாதகமாக பேசியதால் அவர் மீது எனக்கு காழ்ப்புணர்ச்சி உண்டு என்று சொன்னால் சரியல்ல. அவர் மீது எந்தவித காழ்ப்புணர்ச்சியும் எனக்குக் கிடையாது. அவர் மீது காழ்ப்புணர்ச்சி உள்ளதால்தான் பிரதிவாதி சொல்லி அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உமாதேவி சொல்லி தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் இப்போது ஆறுமுகனேரியில் குடியிருந்து வருகிறேன். வீட்டு விலாசம் 10பி/7 கீழசண்முகபுரம், ஆறுமுகனேரி ஆகும். என் மனைவியை நான் அடித்ததாக அ.ம.காவல் நிலையத்தில் 2016 ஜூனில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு பிரதிவாதியின் கணவர் பாலமுருகன்தான் உதவி செய்தார் என்று சொன்னால் அவர் என்னுடன் கூட வந்தார். என் மனைவியை அடித்து, அவரது சொத்தினை எழுதி வாங்க முயற்சித்ததால் என் மனைவி திருநெல்வேலி மாவட்ட சட்டப்

பணிகள் ஆணைக்குழுவில் மனு கொடுத்து எல்.எஸ்.பி. நம்பர் 1154/19 நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்தை கேட்டு அடிக்கவில்லை. ஆனால் சொத்து சம்மந்தமாக நான் கேட்டதால் என் மனைவி தன் சொத்து என்று வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லி விட்டார். அந்த மனு நிலுவையில் உள்ளது என்றும் அதில் நான் ஆஜராகவில்லை என்றும் சொன்னால் அவ்வாறு மனு எதுவும் வரவில்லை. என் தாயார் பெயர் பி.பொட்டையம்மாள். எனக்கு அந்த விலாசத்திற்கு அனுப்பிய சம்மன் திரும்பி வந்ததால் என் தாயார் பெயரை சேர்த்து திரும்ப அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் உமாதேவி சொல்லியுள்ளதால் அவருக்காகவும், அவரது கணவருக்காகவும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.